

முதலமைச்சர் கழகத்தலைவர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் விழா நடைபெறும் இடம்,மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நல துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு செய்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன்,தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி,மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,பந்தல் சிவா,மற்றும் கழக ஒன்றிய செயலாளர்கள்,அரசு அலுவலர்கள் உள்ளது.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஸ்ரீ விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகரட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய கழக செயலாளர்கள் க.செந்தில்குமார், எஸ்.கே.எம்.தங்கராஜ், அணிக்கடவு ச.கிரி, உடுமலைப்பேட்டை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் மகாலட்சுமி முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 4 லட்சம் நிதி!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,ஆக.11-

விருதுநகர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், விஜயகரிசல்குளம் கிராமத்தில் நேற்று (09.08.2025) காலை 11.30 மணியளவில் தனியர் ஒருவருக்கு சொந்தமான வீட்டில் சட்டவிரோதமாக பட்டாசு தயாரித்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த திருமதி.முத்துலட்சுமி (வயது 65) க/பெ.பாண்டியதேவர், திருமதி.சண்முகத்தாய் (வயது 60) க/பெ.பாண்டி மற்றும் கீழ கோதைநாச்சியார்புரம் கிராமத்தைச் சேர்ந்த ஜெகதீசன் (வயது 20) த/பெ.மாரீஸ்வரன் ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.மாரியம்மாள் (வயது 55) க/பெ.ராஜபாண்டியன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### லால்குடி – திருச்சி சாலையில் ஏற்பட்ட

# பேருந்து விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.11-

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியிலிருந்து திருச்சி நோக்கி சென்றுகொண்டிருந்த சிற்றுந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியிலிருந்து திருச்சி நோக்கி சென்றுகொண்டிருந்த TN48 AB8168 என்ற பதிவெண் கொண்ட சிற்றுந்து நேற்று (09.08.2025) காலை 09.30 மணி அளவில் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி தடம்புரண்ட விபத்தில், இலால்குடி, நன்னிமங்கலத்தைச் சேர்ந்த அரவிந்த் (வயது 20) த/பெ. தர்மராஜ், இலால்குடி முஸ்லிம் தெருவைச் சேர்ந்த சாதிக் பாட்சா (வயது 19) த/பெ. ரகிம், இலால்குடியைச் சேர்ந்த விஸ்வநாதன் (வயது 56) த/பெ. தட்சிணாமூர்த்தி ஆகிய மூன்று நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியறிந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் பலத்த காயமடைந்த இலால்குடியைச் சேர்ந்த நபில் (வயது 20) த/பெ.பாப்பான், இலால்குடியைச் சேர்ந்த அப்துல் ரகுமான் (வயது 21) த/பெ. காதர் அலி, இலால்குடி மேலவாளாடியைச் சேர்ந்த கார்த்திகேயன் (வயது 21) த/பெ. காந்தி, இலால்குடியைச் சேர்ந்த ஏகலைவன் (வயது 21) த/பெ. சக்திவேல், நன்னிமங்கலத்தைச் சேர்ந்த ஆனந்த் (வயது 20) த/பெ. தர்மராஜ், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, வடகரையைச் சேர்ந்த கணபதி (வயது 19) த/பெ. ரவிச்சந்திரன் மற்றும் இலால்குடியைச் சேர்ந்த முஸ்தபா (வயது 20) த/பெ. சமீர் ஆகிய ஏழு நபர்கள் மற்றும் இலேசான காயமடைந்த இலால்குடியைச் சேர்ந்த குகன் (வயது 20) த/பெ. இளையராஜா, இலால்குடியைச் சேர்ந்த திலீப் (வயது 19) த/பெ. மாரியப்பன், இலால்குடியைச் சேர்ந்த ஆஷிக் (வயது 18) த/பெ. காதர் ஒலி ஆகிய மூவரும் திருச்சிராப்பள்ளி மகாத்மாகாந்தி நினைவு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தனி மருத்துவக் குழுவினரால் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்து க்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பிரதான் மந்திரி கனிஜ் க்ஷேத்ரா கல்யாண் யோஜனா (PMKKKY) நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் தாக்கத்தை

# மதிப்பீடு செய்யும் ஆய்வுகளை அமைச்சகம் மேற்கொண்டுள்ளதா?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஆக.11-

பிரதான் மந்திரி கனிஜ் க்ஷேத்ரா கல்யாண் யோஜனா (*Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana*) PMKKKY நடைமுறைப் படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை, அந்தத் திட்டத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் ஆய்வுகளை அமைச்சகம் மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால், அதில் இருந்து கிடைத்த முக்கியமான முடிவுகள் என்ன?

மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) நிதியில் இருந்து நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 70% நிதி செலவிட வேண்டும் என்ற வரம்பு எவ்வாறு நடைமுறையில் செயல்படுகிறது என்பதை அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளதா? அத்தகைய பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் அவற்றை சமாளிக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

முக்கிய துறைகள் சார்ந்த உள்கட்டமைப்பு வசதி (*Infrastructure*) திட்டங்களுக்கு DMF நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளதா? செய்திருந்தால், அதன் ஒட்டுமொத்த முடிவுகள், முக்கிய சவால்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசு அளித்துள்ள பதில் வருமாறு:

PMKKKY Guidelines 2024 படி, DMFs ஒரு அடிப்படை சர்வே (*Base Line Survey*) நடத்தி, ஐந்தாண்டுக்கான *Perspective Plan* ஒன்றை உருவாக்கும். இந்த *Survey* அல்லது மதிப்பீட்டின் மூலம் கண்டறியப்படும் தேவை மற்றும் குறைகளின் அடிப்படையில், DMFs ஐந்தாண்டு *Perspective Plan strategy* யை உருவாக்கும்.

மேலும், PMKKKY 2024 Guidelines குறிப்பிடுவது என்னவென்றால் குறைந்தது 70% திட்ட நிதியை குடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு, மருத்துவம், கல்வி போன்ற முக்கிய துறைகளுக்கு பயன்படுத்த வேண்டும் மற்றும் 30% வரை DMF நிதியை வேறு தேவைகளுக்கு அதாவது அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு பயன்படுத்தலாம்.

கூடுதலாக, குறைந்தது 70% DMF நிதியை நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

மேலும், PMKKKY Guidelines 2024 இன் Section 6 படி DMF நிதியிலிருந்து செலவுகளை ஒப்புதல் அளிப்பது என்பது முழுமையாக DMF களின் *Governing Council* களின் பொறுப்பாகும் என்று தெரிவித்துள்ளது.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் தெற்கு நகர தி.மு.க,சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், நகர செயலாளர்கள் ராமச்சந்திரன், பாலசுப்பிரமணியன், மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ்

# தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11–

புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ் இன்று வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் இவற்றில் செயல்படும் ஆலைகள் எத்தனை!

ஒவ்வொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஆலை வாரியாக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? தமிழ்நாட்டில் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசு ஏதேனும் நிதியை விடுவித்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

அம்ருட்டின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் பதில் வருமாறு :- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) என்பது மாநில அரசுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரிகளின் பொறுப்பாகும். திட்டவட்டமான தலையீடுகள், ஆலோசனைகள் மூலம் மாநிலங்களின் முயற்சி களுக்கு ஒன்றிய அரசு துணைபுரிகிறது. புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் (AMRUT) மற்றும் AMRUT 2.0 போன்ற பல்வேறு திட்டங்கள், மிஷன்கள் மூலம் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது.

அம்ருட்டின் கீழ், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் (UTs) திட்டங்களைத் தேர்ந்தெடுக்கவும், மதிப்பிடவும், முன்னுரிமை அளிக்கவும் மற்றும் செயல் படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளன. திட்டப்பணிகள் முடிவடைந்த பிறகு அவற்றைப் பராமரிப்பதும் மாநில அரசுகள் ULBகளின் பொறுப்பாகும்.

AMRUT போர்ட்டலில் மாநில அறிக்கையின்படி, ரூ.5,670.8 கோடி மதிப்பிலான 18 கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டங்கள் AMRUT இன் கீழ் தரையிறக்கப்பட்டுள்ளன. AMRUT இன் கீழ் நாள் ஒன்றுக்கு 289.97 மில்லியன் லிட்டர் (MLD) STP திறன் உருவாக்கப் பட்டுள்ளது மற்றும் 210.03 MLD STP திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தும் கட்டத்தில் உள்ளன. அம்ருத்தின் கீழ் பொது கழிவு சுத்திகரிப்பு ஆலைகளை அரசு எடுக்கவில்லை.

AMRUT இன் கீழ் நிதிகள் மாநிலம், யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன, வெளியிடப்படுகின்றன, திட்ட வாரியாக அல்ல. AMRUT இன் கீழ் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை துறையில் திட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட செலவின் திட்ட வாரியான விவரங்கள் இணைப்பில் உள்ளன என்று தெரிவித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர திமுக சார்பாக நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் பரமத்தி சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் மேற்கு நகர திமுக செயலாளரும், முன்னாள் நகர் மன்ற தலைவருமான ஆர்.நடேசன், கிழக்கு நகர திமுக செயலாளர் தா.கார்த்திகேயன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் அமைதிப் பேரணி நடத்தி, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்கள் திருஉருவப் படத்திற்கு கழக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, முன்னாள் மாவட்ட அவைத் தலைவர் தாண்டவன் மற்றும் மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், சார்பு அணி நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஞா. மணிமாறன்

**ஆகஸ்ட் 11 (1984)**



மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.

1969ல் 'கலைஞர் மன்றம்' என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

'வரதராஜன் கலைக்குழு' எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**